[1975 அக்டோபர் 31

திரு. என். மருதாசலம் : தலைவர் அவர்களே, கோவை நகரத்தில் மின்சாரத் துறையில் வேலை செய்யும் ஊழியர்களுக்கு மின்சார போர்டில் கொடுக்கப்படுகின்ற சலுகைகள் பூராவும் கொடுக்க வேண்டுமென்று அதற்கென ஒரு போராட்டமும் நடந்தது. அதன் அடிப்படையில் நகராட்சியில் கூட ஒரு தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பியுள்ளது. அதாவது கிராஜுவிட்டி, பிராவிடென்ட் பண்டு, சர்வீஸ் அடிப்படையில் வேலை தரவேண்டுமென்று அனுப்பப்பட்டுள்ளது. அதை அரசு கொடுக்க உத்தேசித்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கோவை நகரில் பணியாற்றுகிற நகராட்சியின் சார்பில் இயங்குகிற மின்சார ஊழியர்கள் கோவை நகர மின்சார ஊழியர்கள். அது தமிழ் நாடு மின் வாரியத்தின் கீழ் இயங்கும் ஒரு அமைப்பல்ல. தமிழ்நாடு மின் வாரிய ஊழியர்களுக்கு எந்தச் சம்பள விகிதங்கள் இருக்கின்றனவோ அது அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றன. ஆனால் மேற்கொண்டு சில வசதிகளை—தமிழ் நாடு மின் வாரியத்தில் கொடுப்பது போல் — கேட்கின்றனர். அவற்றில் சிலவற்றை அரசாங்கம் தள்ளுபடி செய்து நிராகரித்தது. சிலவற்றைப் பரிசீலனையில் வைத்திருக்கிறது.

திரு. க. துரைசாமி : தலைவர் அவர்களே, நகராட்சி மின்சாரத் தொழிலாளர்களுடைய கோரிக்கைகள் பரிசீலனையில் உள்ளன என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அப்பரிசீலனை எப்போது முடியும்? அந்தச் சலுகைகள் எப்போது அவர்களுக்குக் கிடைக்கும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : விரைவில் ஆவன செய்யப்படும்.

(முற்பகல் 10-00)

திரு. எம். சுரேந்திரன் : மின்சார வாரியத்தில் பணி செய்கின்றவர்களைப் போலத்தான், ஊராட்சி, நகராட்சி மன்றங்களில் பணி செய்கின்றவர்களும் வேலை செய்கிறார்கள். ஒரேமாதிரியான காரியங்களைச் செய்கிற இவர்களுக்கும், மின்சார வாரியத்தில் உள்ளவர்களுக்குக் கொடுக்கப்படுகிற சலுகைகள் அனைத்தையும் தருவதற்கு அரசு ஆலோசனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.